DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 116/2023

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : ராம் கண்ணன் | Father's/Husband's Name : | மொக்கையன் |
| Village | : உப்புத்துரை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சியாவேன். இன்று நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனது தரப்பு சாட்சியத்தை ஏற்று வாதி கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதியும் நானும் ஒரே ஊரில் தான் குடியிருக்கிறோம். எனது அம்மா பெயர் ஆவுடையம்மாள் என்றால் சரிதான். எனது அம்மா வாதியின் உடன்பிறந்த அக்கா என்றால் சரிதான். தாவா சொத்தான 7 செண்ட் நிலத்திற்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட மொத்த சொத்தை வாதி யாரிடமிருந்து எந்த தேதி கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தான 7 செண்ட் நிலம் பற்றி மட்டும் தான் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1 ஏக்கர் 30 செண்ட் நிலத்தை வாதி 10.02.2005 ம் தேதி கிரையம் வாங்கினார் என்ற விபரம் வாதி சொல்லியதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி பிரதிவாதியின் தந்தைக்கு எந்த தேதியில் கிரையம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிரையத் தொகை ரூ.12,000 த்திற்கு கிரையம் கொடுத்தார். மேற்படி கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை.

2) மேற்படி கிரையப் பத்திரத்தில் வாதி தனது சுய சிந்தனையில் கிரையத்திற்கு கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து

பார்த்துவிட்டு சரிதான் என்று பதிலளித்தார். கிரையத்திற்காக எழுதி கொடுத்த ஆவணத்தை கடன் பொறுப்பிற்காக எழுதி கொடுத்ததாக வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரையமாக கொடுத்த பின்பு கடன் பொறுப்பிற்காக ஆவணம் எழுதி கொடுத்ததாக வாதி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தான 7 செண்ட் நிலம் மட்டும் மண் அடிக்கப்பட்டு மேடாக உள்ளது என்றால் சரியல்ல, ஒரே அளவாக தான் உள்ளது. தாவா சொத்தான 7 செண்ட் நிலத்தில் உள்ள தென்னை மரங்களின் விளைச்சல் எடுப்பதற்காக ஆழந்தளிரை சேர்ந்த சிலம்பரசன் என்பவருக்கு பிரதிவாதிகள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான், அவர் தான் அதில் உள்ள விளைச்சலை எடுத்து வருகிறார். வாதி எனது மாமா என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 06.01.2023 ம்தேதி பிரதிவாதிகள் தங்களுக்குள் எழுதி கொண்ட பாக விஸ்தி பத்திரம் சட்டவிரோதமானது அல்ல என்றால் சரியல்ல. 2005 முதல் இன்று வரை தாவா சொத்தை ராமரும் அவருக்கு பிறகு பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. செல்வராஜ் தான் குத்தகைக்கு விட்டிருக்கிறார்.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 05.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.05 17:34:50 +0530

District Munsif,
Aundipatti.